பக்கங்கள்: 11

# காலைக்கதிர்

Kalaikkathir

விடியல் 09 வள்ளுவர் ஆண்டு 2055 தை 14 திங்கட்கிழமை 27.01.2025 கதிர் 080

## இனி இது ரகசியம் அல்ல!

நாடாளுமன்றத்தில் பிரதிநிதித்துவம் பெற்றுள்ள தமிழ்க் கட்சிகளை ஒரு புள்ளியில் ஒருங்கிணைக்கும் முயற்சியாக தமிழ் அரசுக் கட்சியையும் ☞ 2

# கலைப்பீடாதிபதி ரகுராமால் யாழ். பல்கலையில் குழப்பம்

## பேரவை முடிவை எதிர்த்து அவர் பதவி விலகல் தண்டனை விவகாரத்தில் மாணவர்களுள் பிளவு

**யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கலைப் பீடாதிபதி ரகுராம் பதவி விலகலையொட்டி பல்கலைக்கழகத்திற்குள் குழப்பம் ஏற்பட்டுள்ளது. அவர் மீண்டும் பதவியில் அமர்த்தப்படும் வரை தாம் சாத்வீக வழியில் போராடப் போகிறார்கள் என்று கலைப்பீட மாணவர் ஒன்றியம் அறிவித்துள்ளது. ஆனால்,இந்த முடிவோடு ஏனைய பீடங்களின் மாணவர்கள் பலரும் முரண்படுகிறார்கள். இதனால் மாணவர்கள் மத்தியில் பிளவு ஏற்பட்டுள்ளது.**



**பல்கலைக்கழக மாணவர்கள் சிலருக்கு ஒரு வருட கால வகுப்புத் தடை** ☞ 2

## ஜனாதிபதி ஜன. 31 யாழ். வருகிறார்

ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க ஜனவரி 31 யாழ்ப்பாணத்துக்கு வருகை தரவுள்ளார். இது தொடர்பான ஏற்பாடுகளைக் கவனிப்பதற்காக சபை முதல்வரும் அமைச்சருமான பிமல் ரத்நாயக்க நேற்று யாழ்ப்பாணம் வந்திருந்தார்.

ஜனாதிபதியின் தனது பயணத்தில் யாழ். மாவட்ட செயலகத்தில் விசேட மாவட்ட அபிவிருத்திக் குழுக் கூட்டத்தை நடத்தவுள்ளார்.

தேசிய மக்கள் சக்தியின் யாழ். மாவட்ட அங்கத்தவர்களுடனான மக்கள் சந்திப்புக்களையும் நடத்துவார் என்று தெரிகிறது. தென்மராட்சியில் ஆலய நிகழ்வொன்றில் ஜனாதிபதி பங்கேற்பதற்கான ஏற்பாடுகளும் நடைபெறுகின்றன என்று தெரிவிக்கப்படுகின்றது.

ஜனாதிபதி அநுரகுமார திசநாயக்க நாடாளுமன்றத்தேர்தல்நடைபெறுவதற்கு முன்னதாகக்கட்சியின்பரப்புரைகளுக்காக யாழ்ப்பாணம் வந்திருந்தார். ஜனாதிபதியாகப் பதவியேற்ற பின்னர் அவர் யாழ்ப்பாணம் வருவது இதுவே முதன்முறையாகும்.

### காணாமலாக்கப்பட்டோரின் உறவுகளால்

## பெப். 4 சுதந்திர தினமன்று கிளிநொச்சியில் போராட்டம்

இறுதிப் போரில் காணாமலாக் கப்பட்டவர்களுக்காகு நீதி கிடைக்கும் வரை தொடர்ந்து போராடுவோம். இலங்கையின் சுதந்திரதினமான பெப்ரவரி 4 கிளிநொச்சியில் பெரும் போராடடம்இடம்பெறும்என்று வலிந்து காணாமல்ஆக்கப்பட்டஉறவினர்களின் முல்லைத்தீவு மாவட்டச்சங்கம் நேற்று வலியுறுத்தியது.

சங்கத்தின் புதிய நிர்வாகம் நேற்றுப் பதவியேற்றது. அதன் பின்னர் செய்தியாளர்களிடம் கருத்துத் தெரிவித்த சங்கத்தின் நிர்வாகிகள் தமது போராட்டம் தொடரும் என்று அறிவித்தனர்.

முல்லைத்தீவு மாவட்டத்தின் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர் உறவினர்கள் சங்கத்தின் தலைவி ஈஸ்வரி அப்பதவியில் இருந்து விலகியதன் காரணமாக முல்லைத்தீவு மாவட்ட வலிந்து சங்கத்தின் புதிய நிர்வாகத்தெரிவு இடம்பெற்றிருந்தது.

வடக்கு கிழக்கு வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகள் சங்க தலைவி கனகனகரஞ்சினி, மன்னார் மாவட்ட தலைவி உதயசந்திரா முன்னிலையில் நடந்த இந்தத் தெரிவில் முல்லைத்தீவு மாவட்டத்தின் புதிய தலைவியாக வசந்தினி தெரிவு செய்யப்பட்டார், செயலாளராக கரன், பொருளாளராக நாகேஸ்வரி, உபதலைவராக வீரமணி, உப செயலாளராக ரஞ்சினிதேவி ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர்.

புதிய நிர்வாகத்தின் ஏற்பாட்டில் இலங்கையின் சுதந்திர தினமான பெப்ரவரி 4 கிளிநொச்சியில் பெரும்

## அநுரவின் சண்டித்தனத்திற்கு ஐக்கிய தேசியக் கட்சி மசியாது

### பொதுச் செயலர் தெரிவிப்பு

ஜனாதிபதி அநுரகுமார திசநாயக்க ஒரு சண்டித்தனக்காரர், ஆனால் அந்தச் சண்டித்தனத்தால் ஐக்கிய தேசியக் கட்சியை ஏமாற்ற முடியாது என்று ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச்செயலாளர் தலதா அத்துக்கொரள தெரிவித்துள்ளார்.

அவர் மக்கள் சந்திப்பொன்றில் கலந்து கொண்டு உரையாற்றும்போது இதனைத் தெரிவித்தார். அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:

அநுரகுமார தனது சண்டித்தனத்தை காண்பிப்பதற்கு முனைகின்றார். அவர் சண்டித்தனக்காரர் என்பது எமக்கு தெரியும். ஆனால் அந்த சண்டித்தனத்தை பயன்படுத்தி எம்மை ஏமாற்ற முடியாது. அச்சுறுத்த முடியாது. ☞ 8

## யாழ். பல்கலைக்கழக பொன்விழா ஏப்ரலில் 3 நாள்கள் கொண்டாட்டம்



யாழ்ப்பாண பல்கலைக் கழகத்தின் பொன்விழாவை முன்னிட்டு ஏப்ரல் 26,27,28 ஆகிய தினங்களில் முன்னெடுக்கப்படவுள்ளதாக பல்கலைக்கழகத்தின் கலைப்பீட பழைய மாணவர் சங்கத்தின் தலைவர், யாழ். மாநகர முன்னாள் முதல்வர்



ஆனோல்ட் அறிவித்துள்ளார்.

யாழ்ப்பாண பல்கலைக் கழகத்தின் கலைபீடத்தில் கல்வி கற்ற பழைய மாணவர்கள் ஒன்றிணைந்து இந்தப் பொன்விழாக் கொண்டாட்டங்களை நடத்தத் தீர்மானித்துள்ளனர். இதற்காக உருவாக்கப்பட்ட ஏற்பாட்டுக் குழுவின் ஊடக சந்திப்பு நேற்றையதினம் யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தில் இடம்பெற்றது.

பொன்விழா நிகழ்விற்கு புலத்திலும், நாட்டிலும் ☞ 8

## யாழ். – கொழும்பு தொடருந்து ஓமந்தையில் தடம்புரண்டது

யாழ்.காங்கேசன்துறையிலிருந்து கொழும்பு கோட்டை நோக்கி பயணித்த 'இன்டர்சிட்டி எக்ஸ்பிரஸ்' தொடருந்து ஓமந்தை ரயில் நிலையத்திற்கு அருகில் நேற்றுத் தடம் புரண்டது.

தொடருந்தின் ஒரு பெட்டி மாலை 4 மணியளவில் தடம் புரண்டதாக தொடருந்துத்திணைக்கள அதிகாரிகள் தெரிவித்தனர். தடம்புரண்ட பெட்டியை மீட்டு இந்தப் பாதையில் தொடருந்துப் போக்குவரத்தைச் சீர் செய்வதில் பணியாளர்கள் மும்முரமாகஈடுபட்டிருந்தனர். ☞ 2

## அரச சேவையைப் பலப்படுத்த கடும் நடவடிக்கை எடுக்கப்படும்

### ஜனாதிபதி அநுரகுமார தெரிவிப்பு

பொதுமக்கள் உரிமை என்ற வகையிலும் அரச அதிகாரிகளின் பொறுப்பு என்ற வகையிலும் அரச சேவையை பலப்படுத்த நடவடிக்கை எடுப்பதாக ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க தெரிவித்தார்.

ஜனாதிபதி நேற்று அநுராதபுரம் மாவட்ட செயலகத்தில் நடைபெற்ற அநுராதபுர மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்திலேயே இதனைத் தெரிவித்தார்.

தற்போதுள்ள அரச சேவையில் மக்களுக்குத் திருப்தியில்லை எனச் சுட்டிக்காட்டிய ஜனாதிபதி, அரச சேவையை டிஜிட்டல் மயமாக்குவதன் ஊடாக மக்களுக்கு வினைத்திறனான சேவையை வழங்க முடியும் என்று எதிர்பார்க்கிறார் எனவும் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

எதிர்வரும் ஜூன் மாதத்திற்குள் அரச சேவையில் சரியான தரவு கட்டமைப்பொன்றை தயாரிப்பதற்கு செயலாற்றி வருகின்றோம், தற்போது அரச சேவையில் உள்ள தரவுகளின் அடிப்படையில் சரியான தீர்மானங்களை எடுப்பதற்கான இயலுமை இல்லை.

அரச ஊழியர்களுக்கான நியாயமான அடிப்படை சம்பள அதிகரிப்பு மற்றும் ஓய்வூதியம் பெறுவோரின் சம்பள முரண்பாடுகளை மூன்று வருடங்களுக்குள் முடிவுக்குக்கொண்டு வருவது தொடர்பான முன்மொழிவுகள் இந்த ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தில் முன்வைக்கப்படும் என்றும் ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க தெரிவித்தார். ☞ 2

## யோஷிதவின் கைதுப் படங்களை பொலிஸார் வெளியிடவேயில்லை

### அதன் பேச்சாளர் தெரிவிப்பு

சமூக ஊடகங்களில் தற்போது பரவி வரும் யோஷித ராஜபக்ச கைது செய்யப்பட்டிருந்தபோது எடுக்கப்பட்ட புகைப்படம் குற்றப் புலனாய்வுப் பிரிவிலோ அல்லது ஒரு பொலிஸ் அதிகாரியினாலோ எடுக்கப்படவில்லை என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் புத்திக மனதுங்க தெரிவித்துள்ளார்.

பொலிஸ் தலைமையகத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் இது தொடர்பாக ஊடகவியலாளர்களின் கேள்விகளுக்கு பதிலளித்த அவர் தெரிவித்ததாவது:

சமூக ஊடகங்களில் வெளியான யோஷிதவின் புகைப்படம் பெலியத்த அதிவேக நெடுஞ்சாலை சோதனைச் சாவடியில் தடுத்து வைக்கப்பட்டிருந்தபோது எடுக்கப்பட்ட புகைப்படமாகும். அதை யோஷித ராஜபக்சவின் நண்பர் அல்லது வேறு நபரொருவரால் எடுக்கப்பட்டிருக்கலாம்.

கைதுசெய்யப்படும் ஒவ்வொரு சந்தேகநபருக்கும் கைவிலங்கு போடவேண்டிய அவசியமில்லை, சந்தேகநபரின் நடத்தையைப் பொறுத்து, அந்த நேரத்தில் பணியில் இருக்கும் பொலிஸ் அதிகாரியே சந்தேகநபருக்கு ☞ 2

காலைக்கதிர் Kalaikkathir

## இனி இது .....

ரெலோ உள்ளிட்ட ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கட்சியையும் இன்று மாலை சந்தித்துப் பேசுவதற்கு தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி ஏற்பாடு செய்திருந்த கூட்டம் மீண்டும் பிற்போடப்பட்டிருந்தது.

கூட்டம் இன்று நடக்கும், அதில் பங்கு பற்றுங்கள் அல்லது நீங்கள் பங்குபற்றக்கூடிய மற்றைய கட்சிகளுக்கும் ஏற்புடையதான ஒரு திகதியை அறிவியுங்கள் என்று தமிழ் அரசுக் கட்சிக்கு சனிக்கிழமை ஒரு அழைப்புக் கடிதத்தை முன்னணி தலைவர் கஜேந்திரகுமாரும் செயலாளர் கஜேந்திரனும் கையளித்த பின்னர், திடீரென்று இன்றைய கூட்டம் ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

தமிழ் அரசுக் கட்சி தனது முடிவைத் தெரிவிப்பதற்கு வசதியாகவே கூட்டம் ஒத்திவைக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகின்றது. தமிழ் அரசுக் கட்சி இந்தக் கடிதத்தைக் கண்டதும் அடித்துப் பிடித்துக்கொண்டு தமது கூட்டங்களைக் கூட்டி பதில் சொல்லும் என்று எதிர்பார்க்க முடியாது. இந்த விடயத்தில் கட்சியால் நியமிக்கப்பட்டுள்ள 7 பேர் குழுவே முடிவெடுக்கவேண்டும் என்று தலைவர் சிவஞானம் தெரிவித்துவிட்டார். எனவே இனி அந்தக் குழு கூடும் வரைக்கும் பொறுத்திருக்கவேண்டும்.

புதிய அரசமைப்புக்கான முயற்சிகளை எப்போது தொடங்கப் போகிறோம் என்று ஆளும்தரப்பு இதுவரையில் அறிவிக்காத நிலையில், முன்னணியின் அழைப்புக்கு அவசரப்பட்டு பதில் கிடைக்கும் என்று நான் எதிர்பார்க்கவில்லை. இந்த விவகாரம் அனேகமாக கட்சியின் அடுத்த மத்திய செயற்குழுக் கூட்டத்தின்போது அல்லது அதனையொட்டி ஆராயப்படத்தான் வாய்ப்புக்கள் அதிகம். பெப்ரவரி 8 அடுத்த கூட்டம் என்று கட்சியின் மத்திய குழு ஏற்கனவே அறிவித்துள்ளது. அதனால் ஒத்திவைக்கப்பட்டுள்ள இந்தக் கூட்டம் அடுத்துவரும் தினங்களுக்குள் நடப்பதற்கான வாய்ப்புக்கள் எதுவும் இல்லை.

தமிழ்அரசுக்கட்சிவருகிறதோஇல்லையோ தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியும் ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கட்சியும் இது விடயத்தில் பேசி ஒரு இணக்கத்தை எட்ட முடிந்தால், அதனையும் செய்து பார்க்கலாமே! வருபவர்கள் பின்னால் வந்துகொள்ளட்டும் என்று இந்த இரு தரப்பினரும் பேசி ஒரு முழுமையானஇணக்கத்தைஎட்டமுயல்வதில் ஒரு தவறும் இல்லையே. ஏனெனில் 'ஏக்கிய இராஜ்ஜிய' அரசமைப்பு வரைவு உருவாக்கியபோது, அந்த முயற்சியில் சேர்ந்திருந்த ரெலோ மற்றும் புளொட் ஆகிய இரு கட்சிகள் இப்போது ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியில்தான் இருக்கின்றன. அதுவும்போக அரசமைப்பின் 13ஆவது திருத்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்தவேண்டும் என்றும் அவை தொடர்ந்து வலியுறுத்தி வருகின்றன. முன்னணிக்கோஅவற்றில்எல்லாம்முற்றிலும் மாறுபட்ட கருத்துக்கள் இருக்கின்றன. எனவே தமிழ் அரசுக் கட்சியை விட்டுவிட்டு தமக்குள் பேசி, இந்த இரு தரப்புக்களும் ஓர் இணக்கத்திற்கு வரலாமே! அவர்களுக்கும் ஒரு தெளிவு கிடைக்கும் தமிழ் அரசுக்கும் ஒரு தெளிவு கிடைக்கும்.

**இடிமின்னல்**
(idiminnal@gmail.com)

## கலைப்பீடாதிபதி ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விதிக்கப்பட்டதை எதிர்த்து அவர்கள் உண்ணாவிரதப் போராட்டம் நடத்தினார்கள். தாம் கலைப்பீடாதிபதியால் பழிவாங்கப்படுகிறார்கள் என்று அவர்கள் குற்றஞ்சாட்டியிருந்தார்கள். அது குறித்து ஆராய்ந்த யாழ்ப்பாணப் பல்கலைக்கழகப் பேரவை அவர்களுக்கு எதிரான வகுப்புத் தடையை நீக்கி முடிவெடுத்தது. இதையடுத்து மாணவர்களின் போராட்டம் கைவிடப்பட்டது.

பேரவையின் முடிவை எதிர்த்து கலைப்பீடாதிபதி பதவி விலகுகிறார் என்று ஊடகங்களுக்குத் தகவல் தெரிவிக்கப்பட்டது. ஊடகவியலாளர்கள் சிலருடன் பேசிய கலைப்பீடாதிபதி, போராட்டம் நடத்திய மாணவர்களை மீண்டும் பல்கலைக்கழகத்திற்குள் அனுமதிப்பதற்குப் பேரவைமுடிவுஎடுத்தால்தான்பதவிவிலகுவார் என்று முன்கூட்டியே பேரவையினருக்கு எச்சரித்திருந்தார் என்றும் அப்படியிருந்தும் பேரவை அந்த முடிவை எடுத்ததால் தானது பதவி விலகல் கடிதத்தை பல்கலைக்கழகத் துணைவேந்தருக்குஅனுப்பியுள்ளார்என்றும் தெரிவித்திருக்கிறார்.

இந்தச் செய்தி வெளியே கசிந்ததை அடுத்து, நேற்று யாழ். பல்கலைக்கழகத்திற்குச் செய்தியாளர்களை அழைத்துச் சந்தித்த கலைப்பீட மாணவர் ஒன்றியத்தினர், கலைப்பீடாதி மீண்டும் பதவியில் அமர்த்தப்படும் வரையில் தாம் சாத்வீக வழிகளில் போராடப்போகிறார்கள் என்று தெரிவித்தனர்.

பீடாதிபதியின் பதவி விலகல் கடிதம் பல்கலைக்கழக பேரவையினால் ஆராயப்பட்டு இன்னும் ஏற்கப்படவில்லை என்று பல்பலைக்கழக நிர்வாகம் தெரிவிக்கின்றது. இதற்கிடையில் இந்த விடயத்தை சமாளிப்பதற்காக துணைவேந்தர் தலைமையில் விரிவுரையாளர்கள் சிலர் ரகுராமைச் சந்தித்துப் பேசினர் என்றும் தெரிகின்றது. எனினும்பேரவைதனதுமுடிவை மாற்றாத வரையில் தான் பதவிக்குத் திரும்ப மாட்டார் என்று அவர் தெரிவித்திருக்கிறார் என்றும் கூறப்படுகின்றது. எனினும் அது குறித்த உத்தியோகபூர்வ தகவல்கள் இரு தரப்பினராலும் வெளியிடப்படவில்லை.

போராட்டம்நடத்தினால்மாணவர்களுக்குத் தண்டனை விலக்களிக்கப்பட முடியும் என்ற முன்னுதாரணம் தவறு என்று கூறும் கலைப்பீட மாணவர் ஒன்றியம், தமது பீடத்தைச் சேர்ந்த மாணவர்கள் சிலர் தவறு இழைத்ததன் காரணமாகவே அவர்களுக்குத் தண்டனை வழங்கப்பட்டது என்றும் அது சரியான வழியிலேயே வழங்கப்பட்டது என்றும் தெரிவிக்கின்றது.

ஆனால், தம் மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுக்கள் குறித்து விசாரிக்க நியமிக்கப்பட்ட குழு தமக்கெதிராக எந்தவொரு தண்டனையையும் பரிந்துரைத்திருக்காத நிலையிலும் தாமக்கு வகுப்புத் தடை விதிக்கப்பட்டிருப்பதாகவும் அதனால் கடந்த 8 மாதங்களாகத் தமது கல்வி முழுமையாகப் பாதிக்கப்பட்டிருப்பதாகவும் அதற்கு நீதி கேட்டே தாம் போராட்டத்தில் ஈடுபட்டனர் என்றும் போராட்டத்தில் ஈடுபட்ட முன்னாள் மாணவர்கள் தெரிவிக்கின்றனர்.

மாணவர் ஒழுக்காற்று நடவடிக்கை தொடர்பான சாதாரண விடயத்தை பல்பலைக்கழகத்திற்குள் போதைப் பொருள் பயன்பாடு, பாலியல் விவகாரம், ஆளும்தரப்பு செல்வாக்கு என்ற வகையில் திசைதிருப்பி சுயலாபம் அடைய எடுக்கப்படும் முயற்சிகளே பல்கலைக்கழகத்திற்குள் ஏற்பட்டுள்ள குழப்பத்திற்குக் காரணம் என்றும் பல்கலைக்கழத்தின் சில தரப்புக்கள் 'காலைக்கதிர்' பத்திரிகையிடம் தெரிவித்தன.

## யாழ். ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மஹாவவிலிருந்து காங்கேசன்துறை வரையிலான தொடருந்துப் பாதை பழுதுபார்க்கப்பட்டு திறக்கப்பட்ட பின்னர் பதிவான முதல் தடம்புரள்வுச் சம்பவம் இதுவாகும்.

## பெப். 4 ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

போராட்டம் ஒன்றை நடத்தவுள்ளதாக சங்கத்தினர் தெரிவித்தனர்.

இந்தப் போராட்டத்திற்கு அனைவரும் ஆதரவு தர வேண்டும் என்றும் கோரிக்கை விடுத்தனர்.

## அரச ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அரச சேவையை வலுப்படுத்துவது மற்றும் அரச சேவைக்கான செலவை நிர்வகிப்பதன் அவசியம் குறித்து இக்கலந்துரையாடலில் கவனம் செலுத்தப்பட்டது. இக்கலந்துரையாடலில் அரச சேவையில் காணப்படும் அத்தியாவசியமான 30,000 வெற்றிடங்களுக்கு ஆட்சேர்ப்பு செய்ய வேண்டியதன் அவசியம் குறித்து இங்கு கவனம் செலுத்தப்பட்டதுடன், அது தொடர்பான நிதி ஒதுக்கீடுகளுக்கான முன்மொழிவுகளை இவ்வருட வரவுசெலவுத் திட்டத்தில் முன்வைப்பது குறித்தும் கவனம் செலுத்தப்பட்டது.

தொழில்நுட்ப காரணங்களால் நேர்முகப் பரீட்சைகள் தாமதமாகக்கூடிய வெற்றிடங்கள் குறித்தும் இங்கு ஆலோசிக்கப்பட்டதுடன், ஒருங்கிணைந்த அரச சேவை மூலம் மனிதவளத்தை சரியான முறையில் முகாமைத்துவம் செய்வது குறித்தும் கவனச் செலுத்தப்பட்டது.

தொடர்ச்சி 8ம் பக்கம்....

# பட்டதாரிகளுக்கு உடனடியாக வேலை வாய்ப்புத் தாருங்கள்

### வேலையற்றோர் சங்கம் ஜனாதிபதியிடம் கோரிக்கை

தேர்தல் காலத்தின்போது அநுரகுமார திசாநாயக்கவாக்குறுகளைஅள்ளிவழங்கியதை போன்று காலம் தாழ்த்தாது உடனடியான தீர்வாக வேலைவாய்ப்புக்களை வழங்குமாறு வடகிழக்கு பட்டதாரிகள் ஒன்றியத்தின் உறுப்பினர் புர்கான் கோரிக்கைவிடுத்துள்ளார்.

அவர் நேற்று திருகோணமலையில் செய்தியாளர்களைச்சந்தித்தபோதுதெரிவித்தார். அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:

ஆளும்தரப்பின் அசமந்தப் போக்கு காரணமாக வேலையற்ற பட்டதாரிகள் பல துன்பங்களை அனுபவித்து வருகிறார்கள். பெரும் பொருளாதார கஷ்டம், ஈஸ்டர் தாக்குதல், டெங்கு, கொரோனா என பல சவால்களுக்கு முகங்கொடுத்து உள்வாரி வெளிவாரி பட்டங்களை சுமார் 4, 5 வருட கற்கை களை சிறப்பு பொது பட்டம் என கற்று பூரணமாக்கியதன் பின்பும் தீர்வில்லாமல் தவிக்கிறோம்.

எங்களை போன்ற இளைஞர், யுவதிகளின் குறிப்பாக வேலையற்ற பட்டதாரிகளின் வாக்குகளை வைத்து ஆட்சியை பிடித்த அரசாங்கம் எதிர்வரும் வரவு - செலவு திட்டம் ஊடாக தீர்வு வழங்க வேண்டும்.

ஆசிரியர்களுக்காக 30 ஆயிரம் வெற்றிடங்கள் கிராம சேவகர்களுக்காக 3000க்கும் மேற்பட்ட வெற்றிடங்கள் இருப்பதாகவும் கூறுகின்றனர். இதனை பட்டதாரிகளுக்கு பரீட்சை இன்றி பொது நியமனங்கள் ஊடாக வழங்க வேண்டும்.

பல்வேறு பொருளாதார கஷ்டங்களுடன் திருமணம் முடித்த நிலையில் வாழும் எங்களை நிராகரிக்காமல், கற்ற கல்விக்கான பட்டத்துக்கு தீர்வு தாருங்கள். போட்டி பரீட்சை என்ற பேரில் பரீட்சைக்கு முகங்கொடுக்க முடியாத கேள்விகளை எடுத்து தோல்வியை சந்திக்கின்ற நிலை ஏற்படுகின்றது.

தற்போது கற்கும் உயர்தரம் தொடக்கம் பல்கலைக்கழக மாணவர்களின் எதிர்காலம் கேள்விக்குறியாக்கப்படுகிறது. 2021ஆம் ஆண்டு முதல் உள்வாரி வெளிவாரி பட்டங்களுடன் பலர் பட்டதாரிகளாக தொழிலின்றி அலைகின்றனர்.

இதனை கருத்தில் கொண்டு புதிய ஆளும்தரப்பின்கீழ்பொதுவானநியமனங்களை எங்களுக்கு வழங்க ஆளுநர்கள், துறைசார் அமைச்சுக்கள் புதிய ஜனாதிபதி போன்றோர்கள் மிகக்கரிசனையுடன்செயற்படுங்கள் - என்றார்.

# 34 இந்திய மீனவர்கள் கைது

இலங்கை கடல் எல்லைக்குள் அத்துமீறி நுழைந்து மீன்பிடி நடவடிக்கைகளில் ஈடுபட்ட 34 இந்திய மீனவர்களை இலங்கை கடற்படை கைது செய்துள்ளது.

தலைமன்னாருக்கு வடக்கே உள்ள கடல் பகுதியில் கடற்படையினர் நேற்றுக் காலை மேற்கொண்ட விசேட நடவடிக்கையின் போது குறித்த மீனவர்கள் கைது செய்யப்பட்டனர்.

அவர்கள் வந்த மூன்று படகுகளையும் கடற்படை கைப்பற்றியுள்ளது. கைது செய்யப்பட்ட இந்திய மீனவர்கள் குழுவையும் அவர்களது படகுகளையும் கரைக்கு கொண்டு வந்த பின்னர், மேலதிக விசாரணைகளுக்காக கிளிநொச்சி மீன்வள ஆய்வாளரிடம் ஒப்படைக்கப்படுவார்கள் என்று கடற்படை தெரிவித்துள்ளது.

பறிமுதல் செய்யப்பட்ட படகுகள் மற்றும் இந்திய கடற்றொழிலாளர்கள் 34 பேர் இரணைதீவுக்கு கொண்டு வரப்பட்டு, அடுத்தகட்ட சட்ட நடவடிக்கைகளுக்காக கிளிநொச்சி மீன்வள உதவி பணிப்பாளரிடம் ஒப்படைக்கப்படவுள்ளனர்.

# நெல் கொள்வனவுக்காக அதிகபட்ச நிதி ஒதுக்கீடு

### ஜனாதிபதி தகவல்

நெல் கொள்வனவுக்காக இவ்வாண்டு 500 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளதாக குறிப்பிட்ட ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்க நெல் கொள்முதல் செய்வதற்காக ஒரு ஆளும்தரப்பால் ஒதுக்கப்பட்ட அதிகபட்ச தொகை இதுவாகும் எனவும் சுட்டிக்காட்டினார்.

ஹோமாகம, பிடிபன பகுதியில் நடைபெற்ற மக்கள் சந்திப்பில் பங்கேற்ற ஜனாதிபதி அநுரகுமார இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

நெல் கொள்முதல் செய்ய 500 கோடி ரூபா ஒதுக்கியுள்ளது. சமீபத்திய காலங்களில் ஒரு அரசாங்கம் ஒதுக்கிய மிகப்பெரிய தொகை இதுவாகும். நாங்கள் எங்கள் நெல் களஞ்சியசாலைகள் அனைத்தையும் புதுப்பித்து வருகிறோம். எங்களது களஞ்சியசாலைகள் 300,000 மெட்றிக் தொண்ட கொள்ளளவு கொண்டவை, ஆனால் அவற்றில் 300,000 கொள்ளவுக்கான நெல்லை எங்களால் கொள்வனவு செய்ய முடியாது. ஆனால் அந்தக் களஞ்சியசாலைகளை தனியார் துறை அரிசி சேகரிப்பாளர்களிடம் கொடுக்க நாங்கள் திட்டமிட்டுள்ளோம்.

அதன் பின்னர் அவர்கள் நெல்லை எடுத்து எங்கள் களஞ்சியசாலைகளில் சேமித்து வைப்பார்கள். அரிசியின் அளவு நமக்குத் தெரியும். இலங்கையில் அரிசி ஆலைகளை நடத்தும் அனைத்து நெல் சேகரிப்பாளர்கள் மற்றும் வணிகர்களையும் ஆளும்தரப்பில் பதிவு செய்யுமாறு கேட்டுக்கொண்டு, செய்தித்தாளில் ஒரு விளம்பரம் செய்தோம்.

ஆளும்தரப்பில்பதிவுசெய்யப்படாதஎவரும் இனிமேல் நெல் இருப்புகளைச் சேகரிக்க முடியாது. கொஞ்சம்கூட சேகரிக்க முடியாது. நீங்கள் பதிவு செய்ததன் பின்னர் எவ்வளவு அரிசியை சேமித்து வைத்திருக்கிறீர்கள் என்பது குறித்து வாராந்திர அறிக்கையை அரசுக்கு சமர்ப்பிக்க வேண்டும் என்றார்.

# காலி சிறை மோதல்களில் 4 பேர் காயம்

காலி சிறைச்சாலையில் நேற்றுப் பிற்பகல் இரு குழுக்களுக்கிடையில் மோதல் சம்பவமொன்று இடம்பெற்றுள்ளது. இதில் கைதிகள் நால்வர் காயமடைந்தனர் என்று சிறைச்சாலைகள் ஊடகப் பேச்சாளர் காமினி பி.திசாநாயக்க தெரிவித்தார்.

காயமடைந்த 4 பேரும் சிகிச்சைக்காக காலி தேசிய மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர் என்றும் அவர் குறிப்பிட்டார்.

நிலைமையைக் கட்டுப்படுத்த பொலிஸ் விசேட அதிரடிப் படையினரும் பொலிஸாரும் வரவழைக்கப்பட்டுள்ளனர்.

# கல்முனை இஸ்லாமாபாத் மு. ம. வித்திக்கு ஸ்மார்ட் வகுப்பறை அமைத்துத் தாருங்கள்

## எதிர்க் கட்சித் தலைவர் சஜித் பிரேமதாசவிடம் கோரிக்கை

(அஸ்லம் எஸ்.மௌலானா)

கல்முனை இஸ்லாமாபாத் முஸ்லிம் மகா வித்தியாலயத்திற்கென ஒதுக்கப்பட்ட ஸ்மார்ட் வகுப்பறையை மீளவும் அமைக்குமாறு ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவரும் எதிர்க்கட்சித் தலைவருமான சஜித் பிரேமதாஸவிடம் கல்முனைத் தொகுதி ஐக்கிய மக்கள் சக்தி இணைப்பாளரும் முன்னாள் கல்முனை பிரதேச சபை உறுப்பினருமான தேசகீர்த்தி ஏ. அப்துல் கபூர் கோரிக்கை விடுத்துள்ளார்.

இதனை வலியுறுத்தி அவர் சஜித் பிரேமதாசவுக்கு அனுப்பி வைத்துள்ள கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது -

கடந்த ஜனாதிபதி தேர்தலுக்கு முன்னதாக தங்களது பிரபஞ்சம் வேலைத் திட்டத்தின் கீழ் கல்முனை இஸ்லாமாபாத் முஸ்லிம் மகா வித்தியாலயத்தில் ஸ்மார்ட் வகுப்பறை ஒன்றை அமைப்பதற்காக தகவல் தொழில்நுட்ப டிஜிற்றல் உபகரணங்கள் யாவும் பொருத்தப்பட்டு, தங்களின் கரங்களால் அதனை திறப்பு விழா செய்வதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

எனினும் ஜனாதிபதி தேர்தலுக்கான அறிவிப்பு வெளியிடப்பட்டமையால் இந்நிகழ்வு தற்காலிகமாக ஒத்திவைக்கப்படுவதாக அறிவிக்கப்பட்டதுடன் இங்கு பொருத்தப்பட்ட ஸ்மார்ட் டிஜிற்றல் உபகரணங்களும் அகற்றிச் செல்லப்பட்டன. பாடசாலை சமூகத்தினரின் இணக்கத்தைப் பெற்றுக் கொள்ளாமல் பலத்த எதிப்புக்கு மத்தியில் பலாத்காரமாகவே இவை கொண்டு செல்லப்பட்டன. எனினும் ஜனாதிபதி தேர்தல் முடிந்த பின்னர் இவற்றை மீண்டும் கொண்டு வந்து, ஸ்மார்ட் வகுப்பறை அமைத்துத் தரப்படும் என்று உறுதியளிக்கப்பட்டது.

ஆனால் ஜனாதிபதி தேர்தல் மட்டுமல்ல நாடாளுமன்ற தேர்தலும் முடிவுற்று பல மாதங்களாகியும் இப்பாடசாலையில் ஸ்மார்ட் வகுப்பறையை அமைப்பதற்கான எந்த நடவடிக்கையும் இதுவரை எடுக்கப்படவில்லை. இது பெரும் அநியாயமான செயற்பாடாகும். இதனால் மாணவர்கள், ஆசிரியர்கள், அதிபர் உள்ளிட்ட நிர்வாகத்தினரும் பெற்றோரும் பெரும் கவலையடைந்துள்ளனர். ஐக்கிய மக்கள் சக்தி கட்சியின் ஆதரவாளர்களும் வெறுப்புடன் சந்தேகம் கொண்டுள்ளனர்.

இது விடயமாக கட்சியின் முக்கிய நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு அறிவித்த போதிலும் ஸ்மார்ட் வகுப்பறை விடயத்தை கனவாக நினைத்து மறந்து விடுமாறு பொறுப்பற்ற முறையில் கூறுகின்றனர்.

எனவே, பொறுப்புள்ள தலைமைத்துவம் என்ற ரீதியில் தேர்தலுக்கு முன்னர் உறுதியளித்த படி இனியும் தாமதியாமல் இஸ்லாம்பாத் முஸ்லிம் மகா வித்யாலயத்தில் ஸ்மார்ட் வகுப்பறையை அமைப்பதற்கு துரித நடவடிக்கை எடுத்து உதவுமாறு கேட்டுக் கொள்கிறேன்- என்று அப்துல் கபூர் வலியுறுத்தியுள்ளார்.

# பொத்துவில் கோட்டத்தில் அஸ்ஸாதீக் வித்தி சாதிப்பு

(அபு அலா)

2024ஆம் ஆண்டு இடம்பெற்ற தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் பொத்துவில் கோட்ட அஸ்ஸாதீக் வித்தியாலயத்தில் 14 மாணவர்கள் சித்தியடைந்தனர்.

கடந்த ஆண்டு நடைபெற்ற தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை எழுதிய பொத்துவில் கோட்ட மாணவர்களில் 37 மாணவர்கள் புலமைப்பரிசிலுக்கு தெரிவாகி இருந்தனர். அதில் அதிகூடிய எண்ணிக்கையான மாணவர்கள் 14 பேர் அஸ்ஸாதீக் வித்தியாலயத்திலேயே சித்தியடைந்து தெரிவாகி இருப்பதும் குறிப்பிடத்தக்கது.

இதில் வித்தியாலய அதிபர் எம்.ஏ.சி.சிஹாப்தீன், பாடசாலை வலயக் கல்விப் பணிப்பாளரின் பிரதிநிதியும், ஆரம்ப கல்வி இணைப்பாளருமான ஏ.எம்.எம்.தாஜுதீன் மற்றும் கற்பித்த ஆசிரியர் எம்.கே.அஸ்வத் ஜெயின் ஆகியோர் புலமைப் பரிசிலுக்கு தெரிவாகிய மாணவர்களுடன் காணப்படுகின்றனர்.





# கல்முனை வலயத்திற்கு இலவச சீருடை மற்றும் இலவச பாடநூல் விநியோகம்

(நூருல் ஹுதா உமர்)

கல்முனை இஸ்லாமாபாத் முஸ்லிம் மகா வித்தியாலயத்தில் கல்முனைக் கல்வி வலயத்திற்கான இலவச சீருடை மற்றும் இலவச பாடநூல் வழங்கும் வைபவ ரீதியான நிகழ்வு பாடசாலையின் முதல்வர் ஏ.ஜி.எம்.றிசாத் தலைமையில் வெள்ளிக்கிழமை பாடசாலை ஆராதனை மண்டபத்தில் நடைபெற்றது.

இந்நிகழ்விற்கு அதிதிகளாக கல்முனை கல்வி வலயத்தின் நிர்வாக பிரதிக் கல்விப் பணிப்பாளர் எம்.ஐ.ஜாபீர் மற்றும் கல்முனை கோட்டக்கல்வி அதிகாரி யூ.எல்.றியால் ஆகியோர் கலந்து கொண்டதுடன் பாடசாலையின் பிரதி அதிபர், உதவி அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.





# சமூக சேவையாளர்களுக்கு கௌரவம்

(தில்சாத் பர்வீஸ்)

அலிவா சமூக சேவை நலன்புரி அமைப்பினின் சமூக சேவையை பாராட்டி டேலன்ட் பிளஸ் டிவியினால் சேவையாளர்கள் கௌரவிப்பு நிகழ்வு சனிக்கிழமை நடைபெற்றது.

இந்நிகழ்வில் எஸ்.எச். ஜுவல்ஸ் நிறுவனத்தின் பணிப்பாளர் எம்.ஐ.எம். சர்ஜூன்,அலிவா சமூக சேவை நலன்புரி அமைப்பின் கணக்காளர் பீ.எம். முபாரக் ஆகியோருக்கு டேலன்ட் பிளஸ் டிவியின் பணிப்பாளர் அல்ஹாபிழ் றிசான் முகம்மட் சில்ஹான் அவர்களால் நினைவுச் சின்னமும், கௌரவிப்பும் வழங்கி வைக்கப்பட்டது.

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## ஆர்வத்தோடு தமிழர்கள் காத்திருப்பு

அரசுத் தலைவர் அநுரகுமார திசநாயக்க அதிகாரத்திற்கு வந்து கிட்டத்தட்ட நான்கு மாதங்கள் ஆகின்றன. நவம்பர் 2024 இல் ரணில் விக்ரமசிங்கே தலைமையிலான ஆட்சியிடமிருந்து அவரது நாடாளுமன்ற சகாக்கள் ஆட்சியைப் பிடித்தனர். அதன் பின்னர் இந்த 4 மாதங்களில் ஆளும்தரப்பு தான் வழங்கிய தேர்தல் வாக்குறுதிகளை நிறைவேற்றவில்லை என்கிற குற்றச்சாட்டு உண்டு. இந்த நிலையில் மாதக் கடைசியில் யாழ்ப்பாணம் வருகின்றார் அரசுத் தலைவர். தேர்தலுக்கு முன்னர் யாழ்ப்பாண மக்களுக்கும் வடக்கு மக்களுக்கும் குறிப்பாகத் தமிழ் மக்களுக்கும் தான் வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்றாமலேயே அவரது இந்தப் பயணமும் அமையவுள்ளது.

விலைக் குறைப்பு, பொருளாதார வளர்ச்சி, இலஞ்ச ஊழலுக்கு எதிரான தீவிர நடவடிக்கை, வெளிநாடுகளில் பதுக்கப்பட்ட பணத்தை மீட்டு வருவது போன்ற வாக்குறுதிகள் இலங்கை முழுவதற்கும் வழங்கப்பட்டது. அவை நிறைவேற்றப்படவில்லை என்று எதிர்க்கட்சிகள் தொடர்ந்து குற்றஞ்சாட்டுகின்றன. உணவுப் பொருள்களின் விலைகள் மீண்டும் உச்சத்திற்கு எகிறுவதை ஆளும்தரப்பால் கட்டுப்படுத்த முடியவில்லை. அரிசி விலையைக் கூட கட்டுக்குள் வைத்திருக்க முடியவில்லை. வேலை வாய்ப்புக்களைக் கேட்டுப் போராட்டங்கள் தொடங்கிவிட்டன. சம்பள அதிகரிப்பு அரச பணியாளர்களுக்கு வழங்கப்படும் என்று உறுதியளிக்கப்பட்டிருந்தாலும் தனியார் துறையிலோ அரச துறையிலோ சம்பள அதிகரிப்பை வழங்குவதற்கான பொருளாதார வளர்ச்சியைக் காணமுடியவில்லை.

பன்னாட்-டு நாணய நிதியத்தின் உடன்படிக்கையை ரணில் விக்கிரமசிங்கவின் வடிவத்திலேயே தொடரவேண்டிய நிலையில் ஆளும் தரப்பு சிக்கிக்கொண்டுள்ளது புரிகின்றது. தேங்காய் (இலங்கை உணவு வகைகளில் அவசியமான ஒரு மூலப்பொருள்) உற்பத்தி சந்தைத் தேவைகளைப் பூர்த்தி செய்ய முடியாத ஒரு காலகட்டத்தையும் நாடு எதிர்கொள்கிறது. உற்பத்தியில் ஏற்பட்ட வீழ்ச்சியை ஈடுசெய்ய 2 மில்லியன் தேங்காய்களை இறக்குமதி செய்யுமாறு இலங்கை தேங்காய் தொழில்கள் சபை (ளீளீளீணூ) கோரிக்கை விடுத்துள்ளது. 2023 ஆம் ஆண்டில் 3 பில்லியனாக இருந்த உற்பத்தி 2024 ஆம் ஆண்டில் 2.68 பில்லியன் தேங்காய்களாகக் குறைந்துள்ளதாக வர்த்தக சபை தெரிவித்துள்ளது. இதற்கு பதிலளிக்கும் விதமாக, ஆளும்தரப்பால் தென்னை மரங்களை வெட்டுவதற்கான தடையைத்தான் விதிக்க முடிந்துள்ளது.

எதிர்க்கட்சி சட்டமன்ற உறுப்பினர்கள் ஆளும்தரப்பு எரிபொருள் விலையைக் குறைப்பதன் மூலம் பொதுமக்களை தவறாக வழிநடத்துவதாகவும் குற்றம் சாட்டுகின்றனர். புதிய ஆளும்தரப்பு இதிலிருந்து தன்னை விடுவித்துக் கொள்ள முடியாது. நமது வெளிநாட்டுக் கடன் இன்னும் திருப்பிச் செலுத்தப்படாததால், ஆளும்தரப்பு இந்த வாக்குறுதியை ஒருபோதும் நிறைவேற்ற விரும்பவில்லை என்பது தெளிவாகிறது.

முன்னாள் அரசுத் தலைவர் மகிந்த ராஜபக்சவின் ஆடம்பரமான வாழ்க்கை முறை, உறவினர்களுக்குச் சலுகை, சர்வாதிகார ஆட்சி மற்றும் அவரது நெருங்கிய குடும்ப உறுப்பினர்களின் ஈடுபாட்டுடன் ஊழல் ஒப்பந்தங்கள் குறித்து ஆளும்தரப்பு தேர்தலுக்கு முன்னர் அதிகளவில் குற்றஞ்சாட்டியது. ஆனால் அதிகாரத்தைப் பெற்றபின்னர் மிகச் சொற்பமாகவே செயற்படுகின்றது.

இவையெல்லாவற்றையும் தவிர தமிழர்களுக்குத் தனியான கவலைகள் உண்டு. தேர்தலுக்கு முன்னர் யாழ்ப்பாணத்திற்கும் வடக்கு கிழக்கிற்கும் வந்த அரசுத் தலைவர் அந்தக் கவலைகளுக்குத் தனது ஆட்சியில் தீர்வு தரப்படும் என்று வாக்குறுதியளித்தார். குறிப்பாக அரசியல் கைதிகளின் விடயங்கள். படையினர் ஆக்கிரமிப்பிலிருக்கும் காணிகளின் விடுவிப்பு, பயங்கரவாதத் தடைச் சட்டத்தை நீக்குதல், மாகாண சபைத் தேர்தலை நடத்துவதுடன் அரசமைப்பின் 13ஆவது திருத்தத்தின் கீழ் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களை முழுமையாக மாகாண சபைகளிடம் வழங்குவது என்று பல விடயங்களில் அவர் வாக்குறுதிகளை வழங்கியிருந்தார்.

இப்போது அவரது ஆளும் தரப்பினர் அரசியல் கைதிகளே இல்லை என்கிறார்கள், பயங்கரவாதத் தடைச் சட்டத்தை பயன்படுத்துபவர்கள் பயன்படுத்தினால் அது தவறாகப் போகாது என்கிறார்கள், ஒரு சில வீதிகளை விடுவித்துவிட்டு காணி விடுவிப்புக் குறித்து எந்தப் பதிலும் இல்லாமல் இருக்கிறார்கள், மாகாண சபைத் தேர்தல் நடத்தப்படும் என்று அறிவிக்கப்பட்டாலும் 13 குறிப்பிடும் அதிகாரங்கள் குறித்து மூச்சுக்கூட விடப்படுவதில்லை.

இப்படி தமிழர்களுக்கு வழங்கப்பட்ட வாக்குறுதிகள் எதுவும் நிறைவேற்றப்படாமலேயே அரசுத் தலைவர் மீண்டும் யாழ்ப்பாணம் வருகிறார். இந்தத் தடவை அவர் என்னதான் சொல்லப்போகிறார், வாக்குறுதிகள் நிறைவேற்றப்படாமைக்கு அவர்கள் என்ன காரண காரியங்களைக் கற்பிக்கப்போகிறார், அவை முன்னாள் ஆட்சியாளர்களின் ஏமாற்று வித்தையுடன் எந்தளவிற்கு ஒத்துப்போகப் போகின்றன எனப் பார்ப்பதற்குத் தமிழ் மக்கள் ஆர்வத்தோடு இருக்கிறார்கள்.

# இந்திய குடியரசு தினம் நேற்றுக் கொழும்பில்

இந்தியாவின் 76ஆவது குடியரசு தினம் கொழும்பில் உள்ள இந்திய உயர் ஸ்தானிகராலயத்தால் நேற்று கொண்டாடப்பட்டது.

உலகின் மிகப்பெரிய எழுதப்பட்ட அரசமைப்பான இந்திய அரசியலமைப்பு 1950 ஜனவரி 26ஆம் திகதி நடைமுறைக்கு வந்தமையை இச்சந்தர்ப்பத்தில் நினைவில் கொள்ளலாம்.

இந்த அரசமைப்பின் முன்னுரையானது இந்தியாவை ஒரு இறையாண்மை, சோசலிச, மதச் சார்பற்ற, ஜனநாயக குடியரசு என பிரகடனப் படுத்துகிறது.

இத்தருணத்தில் இந்திய உயர் ஸ்தானிகரின் வாசஸ்தலமான இந்திய இல்லத்தில் பதில் உயர் ஸ்தானிகர் கலாநிதி சத்யாஞ்சல் பாண்டே இந்திய தேசியக் கொடியினை ஏற்றி வைத்து அணி வகுப்பு மரியாதையினையும் பார்வையிட்டார்.

அத்துடன் இந்திய ஜனாதிபதியினது குடியரசு தின உரையின் முக்கிய அம்சங்களும் பதில் உயர்ஸ்தானிகரால் இங்கு வாசிக்கப்பட்டது.

இந்நிகழ்வுகளில் இலங்கை கடற்படையினரின் இசைக்குழாமினர் பாடல்களை இசைத்திருந்த அதேசமயம் உயர் ஸ்தானிகராலயத்தின் கலாசார பிரிவான சுவாமி விவேகானந்தா கலாசார நிலையம் ஒரு கலாசார நிகழ்வினையும் ஒழுங்கமைத்திருந்தது.

நடன மற்றும் இசை ஆற்றுகைகள் மூலமாக இந்தியாவின் செழிப்பான பன்முகத்தன்மை இங்கு கொண்டாடப்பட்டிருந்தது.

'பல்வேறு மாநிலங்கள் ஒரே உணர்வு இந்தியா' என்ற தொனிப்பொருளின் கீழ் இந்திய கலாசார சங்கத்தினால் இந்திய சமூகங்களை சேர்ந்த சிறுவர்களை ஒன்றிணைத்து தேசபக்தி பாடல்களும் இசைக்கப்பட்டிருந்தன.

அதேபோல சுவாமி விவேகானந்தா கலாசார நிலையத்தின் மாணவர்கள் இந்திய தேசிய பாடலான வந்தே மாதரம் பாடலுக்கு நடன ஆற்றுகை ஒன்றையும் அரங்கேற்றியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இந்நிகழ்வுகளில் இந்திய சமூகத்தின் பல நூற்றுக்கணக்கானோர் கலந்துகொண்டிருந்தனர்.

இதேவேளை முன்னதாக பதில் உயர் ஸ்தானிகர் மற்றும் இந்திய உயர் ஸ்தானிகராலயத்தின் அதிகாரிகள் இந்திய அமைதி காக்கும் படையினரின் நினைவுத்தூபியில், உயிர் தியாகம் செய்த இந்திய அமைதி காக்கும் படை வீரர்களுக்கு தமது அஞ்சலிகளை செலுத்தியிருந்தனர்.

இந்திய இல்லத்தில் நேற்று மாலை சம்பிரதாயபூர்வமான வரவேற்பு உபசாரம் ஒன்றும் ஒழுங்கமைக்கப்பட்டுள்ளது. இலங்கையின் சகல துறைகளையும் சேர்ந்த பிரமுகர்கள் இந்நிகழ்வில் கலந்துகொண்டனர்.

இந்திய அரசியலமைப்பு நடைமுறைக்கு வந்து 75 ஆண்டுகள் நிறைவடைந்திருப்பதனை இந்த வருடத்தின் குடியரசு தினம் குறித்து நிற்கும் அதேவேளை 'இந்தியாவின் பாரம்பரியம் மற்றும் கலாசார நெறிமுறைகளைப் பாதுகாத்து, நவீனமயமாக்கல் மற்றும் அபிவிருத்தி ஆகியவற்றை வெற்றிகொள்ளல்' என்ற இளம் இந்தியாவின் உறுதிப்பாட்டினை தொனிப்பொருளாக கொண்டு இக்கொண்டாட்டங்கள் நடைபெற்று வருகின்றன.

## யாழ்ப்பாணம்

இந்தியாவின் 76வது குடியரசு தினமான நேற்று பலாலியில் உள்ள இந்திய அமைதிப்படையினரின் நினைவிடத்தில் அஞ்சலி நிகழ்வுகள் நடைபெற்றன.

இந்தியத் துணைத் தூதுவர் சாய் முரளி யாழ். மாவட்ட இராணுவ தளபதி மேஜர் ஜெனரல் வை.ஏ.பி.எம்.யஹம்பத் உள்ளிட்டோர் மலர் வளையம் வைத்து அஞ்சலி செலுத்தினர்.

கடந்த 1987ஆம் ஆண்டு முதல் 1990ஆம் ஆண்டு வரையிலான காலப்பகுதியில் அமைதிப்படை எனும் பெயரில் இந்திய இராணுவத்தினர் யாழ்ப்பாணத்தில் நிலைகொண்டிருந்தனர்.

அக்கால பகுதியில் யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற மோதல் சம்பவங்களின்போது உயிரிழந்த இந்திய இராணுவத்தினரின் நினைவிடம் பலாலி இராணுவ தலைமையகம் அமைந்துள்ள உயர் பாதுகாப்பு வலயத்தினுள் அமைந்துள்ளது.

அங்கு சென்றே இந்திய துணைத் தூதுவர் தலைமையிலான இந்திய தூதரக அதிகாரிகள் அஞ்சலி செலுத்தினர்.

இதனையடுத்து யாழ்ப்பாணம் இந்திய துணைத் தூதரகத்தில் குடியரசு தினத்தினை முன்னிட்டு நிகழ்வுகள் நடைபெற்றன.

யாழ்ப்பாணம் மருதடி பகுதியில் உள்ள யாழ்ப்பாணம் இந்திய துணைத் தூதரகத்தில் யாழ்ப்பாணம் இந்திய துணைத்தூதுவர் சாய் முரளி இந்திய தேசிய கொடியை ஏற்றிவைத்தார். அதனை தொடர்ந்து இந்திய ஜனாதிபதியின் குடியரசு தின வாழ்த்துச் செய்தி வாசிக்கப்பட்டது. மாலையில் வரவேற்பு விருந்துபசாரம் நடைபெற்றிருந்தது.

## கண்டி

இந்தியாவின் 76ஆவது குடியரசு தின நிகழ்வுகள் கண்டி துணை தூதரகத்தில் இந்திய துணைத்தூதுவர் வி.எஸ். சரண்யா தலைமையில் நேற்று நடைபெற்றது.

இந்திய தேசிய கொடியேற்றல் மற்றும் தேசிய கீதத்துடன் ஆரம்பமான இந்த நிகழ்வில் இந்திய குடியரசுத் தலைவரின் சிறப்புரையை கண்டி இந்திய துணைத்தூதுவர் சரண்யா வாசித்தார்.

அதனை தொடர்ந்து கலை நிகழ்வுகள் நடைபெற்றன. குடியரசு தின நிகழ்வில் சர்வ மத பெரியார்கள், அரச அதிகாரிகள், அமைப்புகளின் பிரதிநிதிகள் இந்திய துணை தூதுவராலய அதிகாரிகள், இந்திய பிரஜைகள், முன்னாள் மத்திய மாகாண அமைச்சர்கள், உறுப்பினர்கள், ஊடகவியலாளர்கள் என பலரும் கலந்துகொண்டனர்.

## அம்பாந்தோட்டை

இந்தியாவின் 76ஆவது குடியரசு தின நிகழ்வுகள் அம்பாந்தோட்டையில் உள்ள துணை தூதரகத்தில் இந்திய துணைத்தூதுவர் ஹர்விந்தர் சிங் தலைமையில் நேற்று நடைபெற்றது.

இந்திய தேசிய கொடியேற்றல் மற்றும் தேசிய கீதத்துடன் ஆரம்பமான இந்த நிகழ்வில் இந்திய குடியரசுத்தலைவரின் சிறப்புரையை துணைத்தூதுவர் ஹர்விந்தர் சிங் வாசித்தார்.

அதனை தொடர்ந்து கலை நிகழ்வுகள் நடைபெற்றன. குடியரசு தின நிகழ்வில் சர்வ மத பெரியார்கள், அரச அதிகாரிகள், அமைப்புகளின் பிரதிநிதிகள் இந்திய துணை தூதுவராலய அதிகாரிகள், இந்திய பிரஜைகள், முன்னாள் மாகாண அமைச்சர்கள், உறுப்பினர்கள், ஊடகவியலாளர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.









# கற்பிட்டியில் செடோ தொலைக்காட்சி அறிமுகமும் 'கிளீன் சிறிலங்கா' குறுந்திரைப்படப் போட்டியும்

(சியாஜ்)

கற்பிட்டி செடோ ஸ்ரீலங்காவின் மற்றுமோர் முயற்சியாக செடோ தொலைக்காட்சி அறிமுகமும் அரசால் நடைமுறைப்படுத்தப்பட்டு வரும் கிளீன் சிறி லங்கா வேலைத்திட்டத்தை மையப்படுத்தி கிளீன் சிறீ லங்கா என்ற கருப்பொருளில் குறுந்திரைப்பட போட்டியின் ஆரம்ப நிகழ்வு சனிக்கிழமை செடோ ஊடகப் பிரிவின் ஏற்பாட்டில் செடோ ஸ்ரீலங்கா நிறுவனத்தின் பணிப்பாளர் ஏ. ஆர் முனாஸ் தலைமையில் செடோ ஸ்ரீலங்காவின் தலைமையகத்தில் இடம்பெற்றது.

மேற்படி நிகழ்வில் சமூக செயற்பாட்டாளர் மஞ்சுளா கேஷவமூர்த்தி , செடோ ஸ்ரீலங்கா நிறுவனத்தின் ஆலோசனைக் குழு உறுப்பினர் டி.எல்.எம் மகீன், கற்பிட்டி கலை இலக்கிய மன்றத்தின் தலைவர் எஸ்.எம் அருஸ், தொழிலதிபர் ஏ.ஆர்.எம் முஸம்மில், அபிவிருத்தி உத்தியோகத்தரும் அகிலஇலங்கை சமாதான நீதவானுமாகிய ஏ.ஆர்.எம் அஸ்கர், சமூக செயற்பாட்டாளர் சபுறுல்லாஹ், சமூக ஊடகவியலாளர் எஸ்.எம் றிஸ்விஹுசைன் ஆகியோருடன் செடோ ஸ்ரீ லங்கா நிர்வாக பொறுப்பாளர் ஏ.ஆர்.எம் ஹாபிஸ், செடோ ஸ்ரீ லங்கா ஊடாக இணைப்பாளர் சன்ஹீர் சஜான், செடோ ஸ்ரீ லங்கா நிறுவனத்தின் நிர்வாக மேற்பார்வையாளர் எஸ்.எப் சுஜானா ஆகியோரும் கலந்து கொண்டமையும் குறிப்பிடத்தக்கது.



# தைப்பூச தேர்த் திருவிழாவிற்கு ஒத்துழைப்பு நல்குமாறு நகர சபையிடம் மனு கையளிப்பு

(கேதீஸ்)

தலவாக்கலை ஸ்ரீகதிரேசன் ஆலயத்தின் வருடார்ந்த தைப்பூச தேர்த்திருவிழாவையொட்டி ஆலய பரிபாலன சபைத் தலைவர் தர்மராஜ் தலைமையில் தலவாக்கலை லிந்துலை நகரசபை செயலாளருடன் விசேட கலந்துரையாடலொன்று நடைபெற்றது.

இதன்போது நடைபெறயிருக்கும் தேர் தேர்த்திருவிழாவின்போது பூரண ஒத்துழைப்பை வழங்குமாறு தலவாக்கலை லிந்துலை நகர சபையின் செயலாளரிடம் மநு ஒன்று கையளிக்கப்பட்டது.



# அதிக மாணவர்கள் சித்தியடைந்த அல் முனீரா பெண்கள் பாடசாலை

(றிபாஸ்)

அக்கரைப்பற்று வலயக் கல்வி அலுவலகத்தின் கீழ் இயங்கும் அட்டாளைச்சேனை கோட்டக்கல்விக்குட்பட்ட அல் முனீரா பெண்கள் உயர் பாடசாலையில் 17 மாணவர்கள் தரம் ஐந்து புலமைப் பரீட்சையில் சித்தியடைந்துகோட்டத்தில் முதலாமிடத்தை பெற்றுள்ளனர்.

அட்டாளைச்சேனை கல்வி கோட்டத்தில் தரம் ஐந்து புலமைப் பரீட்சையில் அதிகமான மாணவர்கள் சித்தியடைந்த பாடசாலை அல் முனீரா பெண்கள் உயர் பாடசாலையாகும்.



சித்தியடைந்த மாணவர்களுடன் பாடசாலையின் அதிபர் எம்.ரீ.எம்.சியாத், ஆரம்ப பிரிவு வலயத் தலைவர் எம்.ஐ.ஜெளபர், பிரதியதிபர்களான எம்.ஏ. சுஹைறா, ஏ.கே.அனீஸ், உதவியதிபர் ஏ.ஜீ.எம்.றினீஸ், மற்றும் மாணவர்களுக்கு கற்பித்த ஆசிரியர்களான எம்.வை.சம்ஹூடீன், ஏ.ஆர்.றிம்ஸான் ஆகியோர் காணப்படுகின்றனர்.

முல்லை ஓய்வு நகர்
Mullai Rest City
எழுதுமட்டுவாழ் நகரில்
2 பரப்பு, 4 பரப்பு காணிகள் விற்பனைக்கு!
இயற்கையான சூழலில் உங்களின் ஓய்வுகாலத்தினை மகிழ்ச்சியாகவும் ஆரோக்கியத்துடனும் வாழுங்கள்!
உங்களுக்கு விரும்பியவாறு வீடுகளை அமைத்துக்கொள்ளலாம்.
மாசற்ற இயற்கையான சூழல் – பாரம்பரிய முறையிலான வாழ்க்கை – ஆரோக்கிய நிலையங்கள்
அத்தியாவசிய தேவைகள் அனைத்தும் அருகில் – பொழுதுபோக்கு அம்சங்கள்
முதியோர் பராமரிப்பு வசதி – தியான மண்டபம் – மூலிகைத்தோட்டத்துடன் மூலிகைக் குளியல்
அறிவார்ந்த நூல்கள் அடங்கிய நூலகம் – உள்ளூர் வானொலிச் சேவை
ஒன்றுகூடல் நிலையம் – பாரம்பரிய உணவகம் – பல்பொருள் அங்காடி
சுத்தமான குடிநீர் விநியோகம் – யோகா நிலையம்
விருந்தினர் விடுதி – சிறுவர் பூங்கா
ஆயுள்வேத சிகிச்சை நிலையம்
மீன்பிடி குளம் – தாரா பண்ணை
பூங்கா – நடைபயிற்சிப் பாதை – உடற்பயிற்சிக் கூடம்
உள்ளக விளையாட்டுத் தொகுதி – விளையாட்டு மைதானம்
4th Project
இது ஒரு கற்பகவனம் செயற்திட்டம்
Good Gift Property Developers (Pvt) Ltd

தொடர்புகளுக்கு: 0777 43 5557

காலைக்கதிர் Kalaikkathir

# கலைஞர் சுவதம் விருது பெற்றார் சாய்ந்தமருது நாடகர் அலி றஜாய்

(ஸாகிர்)

சாய்ந்தமருதைச் சேர்ந்த எம்.எச்.எம். அலி றஜாய் நாடகத்துறைக்காக கலைஞர் சுவதம் விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்டார்.

கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் அனுசரணை மற்றும் வழிகாட்டலில் சாய்ந்தமருது பிரதேச செயலகத்தில் உள்ள கலைஞர்களைத் தெரிவு செய்து அவர்களைக் கௌரவிக்கும் முகமாக வீட்டுக்கு வீடு சென்று கலைஞர் சுவதம் விருது வழங்கும் நிகழ்வு சாய்ந்தமருதில் வெள்ளிக்கிமை இடம்பெற்றது.

நாடகக் கலைஞராக இருந்து பிரதேத்தில் எடுக்கப்பட்ட பல நாடகங்களில் நடித்து தனது திறமையைக் காட்டி வரும் இவர், இவ்வருடம் இடம்பெற்ற கலைஞர் சுவதம் தெரிவின் போது கௌரவிக்கப்பட்டார்.

சாய்ந்தமருது அல்கமரூன் வித்தியாலயம், கல்முனை சாஹிரா தேசிய பாடசாலை ஆகியவற்றில் தமது ஆரம்ப மற்றும் உயர்கல்வியைக் கற்ற இவர், கணினியிலும் பாண்டித்தியம் பெற்றுள்ளார்.

மிகவும் கஸ்டத்துக்கு மத்தியில் பாடசாலை செல்லும் வயதிலே தொழில் புரிந்து, 2006ஆம் ஆண்டு 'டொப் குயின்' எனும் வியாபார நிலையத்தை தனது சகோதரன் வசீர் என்பவருடன் இணைந்து ஆரம்பித்து, மிகவும் சிறப்பான முறையில் பணியாற்றி, நல்ல சிறந்த தொழில் அதிபர் எனும் விருதுகளும் பெற்றுள்ளார்.

அத்துடன் மருதம் கலைக்கூடல் மன்றத்தில் பிரதித் தலைவராக 11 ஆண்டுகள் கடமை புரிந்து அதிலும் பல விருதுகளும் பெற்று, கௌரவிக்கப்பட்டுள்ளதோடு, இவர்



கொழும்பு தமிழ் சங்கத்தினாலும் பாராட்டுக்களைப் பெற்றுள்ளதும் குறிப்பிடத்தக்கது.

சாய்ந்தமருது பிரதேச செயலக கலாசார அபிவிருத்தி உத்தியோகத்தர் ஏ.எச். சபிக்காவின் நெறிப்படுத்தலில், சாய்ந்தமருது பிரதேச செயலாளர் எம்.எம். ஆசிக் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில், அதிதிகளாக அம்பாறை மாவட்ட கலாசார உத்தியோகத்தர் ரீ.எம். றிம்ஸான், நிருவாக கிராம உத்தியோகத்தர் எம்.எஸ். நளீர், கலாசார உத்தியோகத்தர் ஏ.எல்.எம். தௌபீக், சாய்ந்தமருது பிரிவு-01 இன் கிராம அதிகாரி எஸ்.எம். இல்பான், சமுர்த்தி உத்தியோகத்தர் ஏ.எம்.கால்தீன், பிரதேச கலாசார அதிகார சபையின் பொருளாளர் அஸ்வான் சக்காப் மௌலானா, கலைஞர் என்.எம். அலிக்கான், ஊடகவியலாளரும் பல்துறைக் கலைஞருமான எம்.எஸ்.எம்.ஸாகிர் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

# புத்தளம் நல்லாந்தழுவை முஸ்லிம் பாடசாலையில் 8 பேர் தரம் 5 சித்தி

(சியாஜ்)

தற்போது வெளியாகியுள்ள தரம் - 5 புலமைப் பரிசில் பரீட்சையில் புத்தளம் - தெற்கு கோட்டத்திற்கு உட்பட்ட புத்தளம் நல்லாந்தழுவை முஸ்லிம் ஆரம்ப பாடசாலையின் மாணவர்களான மொஹமட் றில்வான்றுகைய்யா 158 புள்ளிகள், மொஹமட் சப்ராஸ் சுஹைல் அஹமட் 147 புள்ளிகள், மொஹமட் மசூத் பாத்திமா மன்ஹா 147 புள்ளிகள், மொஹமட் சபீக் ஸாபீயா 146 புள்ளிகள் , மொஹமட் றஸாத் பாத்திமா றஹா 144 புள்ளிகள், மொஹமட் றியாத் பாத்திமா றிபா 142 புள்ளிகள், மொஹமட் ஐனூன் பாத்திமா அம்ரா 142 புள்ளிகள் , அப்துல் முனாப் முவீதா பானு 140 புள்ளிகள் என மாவட்ட வெட்டுப் புள்ளிக்கு மேல் பெற்று எட்டு மாணவர்கள் சித்தியடைந்துள்ளனர் என பாடசாலையின் அதிபர் எம் எம் ஹூதைபா தெரிவித்தார்.

மேலும் பாடசாலையில் இருந்து பரீட்சைக்குத் தோற்றிய 123 மாணவர்களில் 70 புள்ளிகளுக்கு மேல் 71 சதவீத சித்திகள் பெற்றுள்ளனர்.

இம் மாணவர்கள் மற்றும் அவர்களுக்கு அச்சாணியாக திகழ்ந்த ஆசிரியர்களையும் அதிபர் பாடசாலை நிர்வாகம், அபிவிருத்திக் குழு, பழைய மாணவர்கள் சார்பாக தமது வாழ்த்துக்களையும் பாராட்டுக்களையும் தெரிவித்துள்ளனர்.

# இறக்காமம் வரிப்பத்தான்சேனை லீடரில் 5 மாணவர்கள் புலமைப் பரிசில் சித்தி .

(சகா தேவராஜா)

சம்மாந்துறை வலயத்தின் இறக்காமம் கோட்டத்திலுள்ள வரிப்பத்தான்சேனை லீடர் ஜூனியர் பாடசாலையில் இம்முறை தரம் ஐந்து புலமைப் பரிசில் பரீட்சைக்குத் தோற்றி 5 மாணவர்கள் வெட்டுப் புள்ளிக்கு மேல் பெற்று சித்தி அடைந்துள்ளனர் என்று அதிபர் நிஹால் உமறுகத்தா தெரிவித்தார்.

முகம்மது மக்பூல் அல்பர் சயான் -159, முகம்மது றிபாய் ஆக்கிப் அகமட்-148, நுபைல் ஹைபா கைஸ்-145, முகம்மது ஜெஸீம் அகமட் ஹனீப் -145, முகம்மது சியான் ஆஹில் அஹ்னட்-144 ஆகியோர்கள் சித்தி பெற்று பாடசாலைக்கும் ஊருக்கும் பெருமை தேடித் தந்த மாணவர்கள் ஆகும்.



சாதனை மாணவர்கள் பா.அ.ச. உறுப்பினர்களால் மாலை அணிவித்து ஏனைய மாணவர்கள் முன்னிலையில் பரிசில்கள் வழங்கி கௌரவிக்கப்பட்டனர்.

கற்பித்த ஆசிரியை ஏ.எம்.மஃபியா ஏ.சி.அப்றோஸ் ஜஹான் ஆகியோர்களும் கௌரவிக்கப்பட்டனர்.

இந் நிகழ்வில் கோட்டக் கல்வி பணிப்பாளர் யூ.எல்.மஹ்மூது லெவ்வை கலந்து சிறப்பித்தார்.












# தென்மராட்சி கல்வி வலயத்தில் போக்கட்டி அ.த.க மாணவி புலமைப்பரிசிலில் முதலிடம்

(சுபேசன்)

தென்மராட்சி கல்வி வலயத்தில் கொடிகாமம் போக்கட்டி அதக பாடசாலை மாணவி செல்வி ச.கபிசிகா 2024ஆம் ஆண்டு இடம்பெற்ற புலமைப்பரிசில் பரீட்சையில் 170 புள்ளிகளைப் பெற்று வலயத்தில் முதலிடம் பெற்றுள்ளார்.

அதேநேரம் இடைக்குறிச்சி ஸ்ரீசுப்பிரமணிய வித்தியாலய மாணவன் அ.அபிரதன் 169 புள்ளிகளைப் பெற்று கல்வி வலயத்தில் இரண்டாம் இடத்தினைப் பெற்றுள்ளார்.

தென்மராட்சியில் இம்முறை பின்தங்கிய பாடசாலை மாணவர்கள் முதலிடங்களைப் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.





# உணவில் கரப்பான் பூச்சி இருந்த ஹற்றன் உணவகம் மீது நடவடிக்கை

(கேதீஸ்)

சாப்பிட்ட உணவில் கரப்பான் பூச்சி ஹோட்டல் உரிமையாளருக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக ஹற்றன் நகரசபை பொது சுகாதார பரிசோதகர் எஸ்.சௌந்தர்ராகவன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக தெரியவருவதாவது -

ஹட்டன் நகரில் ஞாயிற்றுக்கிழமை மாலை பிரபல ஹோட்டல் ஒன்றில் இருவர் பகல் உணவு சாப்பிட்டபோது உணவில் கரப்பான் பூச்சி இருந்துள்ளது. இதன்காரணமாக ஹோட்டல் உரிமையாளருடன் குறித்த இருவருக்கும் முரண்பாடு ஏற்பட்ட நிலையில் 119 இற்கு அழைப்பு விடுக்கப்பட்டு ஹற்றன் பொலிஸார் சம்பவ இடத்திற்கு சென்று விசாரணைகளை முன்னெடுத்ததோடு ஹற்றன் நகரசபை பொது சுகாதார பரிசோதகர் எஸ்.சௌந்தர்ராகவனுக்கு முறைப்பாடுசெய்யப்பட்டது.

சம்பவ இடத்திற்கு சென்ற நகரசபை பொது சுகாதார பரிசோதகரின் பரிசோதனையின் பின்னர் ஹோட்டல்உரிமையாளருக்கு எதிராக ஹற்றன் நீதிவான் நீதிமன்றத்தில் வழக்கு தொடர ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.





# உள்ளூராட்சி தேர்தலில் நாபீர் பவுண்டேஷன் அம்பாறையில் தனித்து போட்டியிட தீர்மானம்

(பாறுக் ஷிஹான்)



எதிர்வரும் உள்ளூராட்சி சபை தேர்தலில் நாபீர் பவுண்டேஷன் அம்பாறை மாவட்டம் முழுவதும் உள்ள பிரதேச சபைகளில் தனித்து போட்டியிவிடுவதற்கான செயற்பாடுகளை முன்னெடுத்து வருகின்றது என முன்னாள் மாகாண சபை உறுப்பினர் சட்டத்தரணி துல்சான் தெரிவித்துள்ளார்.

நேற்று (ஞாயிற்றுக்கிழமை) சம்மாந்துறை ஈ.சி.எம். நிறுவனத்தின் கேட்போர் கூடத்தில் நடைபெற்ற ஓட்டோ சங்கங்களுடனான கலந்துரையாடலில் முன்னாள் மாகாண சபை உறுப்பினர் சட்டத்தரணி துல்சான் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

மேலும் தனது கருத்தில் தெரிவித்தவை வருமாறு -

எதிர்வரும் உள்ளூராட்சி சபை தேர்தலில் நாபீர் பவுண்டேஷன் அம்பாறை மாவட்டம் முழுவதும் உள்ள பிரதேச சபைகளில் தனித்து போட்டியிவிடுவதற்கான செயற்பாடுகளை முன்னெடுத்து வருகின்றது. அந்த வகையில் திகாமடுல்ல தேர்தல் மாவட்டத்தில் சகல பிரதேச சபைகளிலும் வேட்பாளர்களை இறக்கி வெற்றி பெறுவதற்கான ஏற்பாடுகளைச் செய்துவருகின்றோம். இதன் பிறகு வருங்காலங்களில் அரசியலில் நாம் அகலக்கால் பதித்துதடம்பதித்து சாதித்து காட்டுவோம் என்பதை உறுதியாக கூறுகின்றேன். - என்றார்.

இக்கலந்துரையாடலில் இறுதியில் அனைத்து சங்கங்களின் உறுப்பினர்களும் எதிர்வரும் பிரதேச சபை தேர்தலிலே சபையை முழுமையாக வென்றெடுப்பதற்கு எங்களால் முடிந்தவரை இறுதி வரை போராடுவோம் என உறுதி அளித்தனர். இக்கூட்டம் நடைபெற்றுக் கொண்டிருக்கும் போது ஆட்டோக்கள் அதிகமாக நிறைந்து காணப்பட்டதால் போக்குவரத்துக்குசற்றுநேரம் தடங்கலாக இருந்து பின்னர் உடனடியாக போக்குவரத்து சரி செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது. மேலும் சம்மாந்துறை பிரதேசத்தில் உள்ள சகல ஆட்டோ சங்கங்களின் தலைவர் செயலாளர் உறுப்பினர்கள் அனைவரும் கலந்து கொண்டு தத்தமது கருத்துக்களைத் தெரிவித்தனர். அத்தோடு ஆட்டோ சங்கங்களின் ஏக ஆலோசகரான சட்டத்தரணி ஏ.எ. நஸீல் சிறப்பு அதிதியாகவும் கலந்துகொண்டு கருத்துக்களை தெரிவித்தார்.



## அரச ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அநுராதபுரம் மாவட்டத்தின் கல்வி, சுகாதாரம், நீர்ப்பாசனம், விவசாயம், காட்டு யானைகள் பிரச்சினைகள் உள்ளிட்ட பல விடயங்கள் தொடர்பில் இதன்போது ஜனாதிபதியின் கவனத்துக்குக் கொண்டுவரப்பட்டது.

அநுராதபுரம் மாவட்டத்தை சுற்றுலாப் பிரதேசமாக அபிவிருத்தி செய்வதற்கான சாத்தியக்கூறுகள் தொடர்பில் கலந்துரையாடப்பட்டதுடன், சிற்றி பிராண்டிங் (City Brandng) முறையை பயன்படுத்தி அனுராதபுரத்தை சுற்றுலாப் பயணிகளைக் கவரும் இடமாக மாற்றுவது தொடர்பிலும் கலந்துரையாடப்பட்டது.

உள்நாட்டு சுற்றுலாப் பயணிகள் அதிகம் வருகை தரும் அனுராதபுரத்தை வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளுக்காகத் திறப்பதற்கான பெரும் சாத்தியங்கள் காணப்படுவதுடன், இலங்கையின் முதல் இராசதானி மற்றும் முதலாவது குளம் கட்டப்பட்ட இடம் என்ற வகையில் வெளிநாட்டவரைக் கவரும் வகையில் அதனை மேம்படுத்துவது குறித்தும் கவனம் செலுத்தப்பட்டது.

சமூக மனப்பான்மையில் மாற்றத்தை ஏற்படுத்தி சிறந்த சமூகத்தை உருவாக்க 'ஊடநயஜளுசஷ்டயமெய' வேலைத்திட்டத்தை நடைமுறைப்படுத்த வேண்டியதன் அவசியத்தை ஜனாதிபதி மேலும் வலியுறுத்தினார்.

## யோஷிதவின்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கைவிலங்கு போடலாமா வேண்டாமா என்பதை என்பதைத் தீர்மானிப்பார்

அதன்படி, பொலிஸ் அதிகாரிகள் உரிய நேரத்தில் சரியான சட்ட நடவடிக்கைகளை எடுத்துள்ளனர், எந்த விதத்திலும் அரசியல் அதிகாரத்தின் தலையீடு காணப்படவில்லை.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்சவின் இரண்டாவது மகனான யோஷித ராஜபக்ச, வெள்ளிக்கிழமை தெற்கு அதிவேக நெடுஞ்சாலையின்பெலியத்தநுழைவாயிலுக்கு அருகில் கைது செய்யப்பட்டார். குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தை சேர்ந்த அதிகாரிகள் குழுவால் அவர் கைது செய்யப்பட்டார்.

இரத்மலானை, சிறிமல் பிரதேசத்தில் அமைந்துள்ள 34 மில்லியன் ரூபா மதிப்புள்ள வீடு மற்றும் காணியை வாங்கியது தொடர்பாக யோஷித ராஜபக்ஷவை சந்தேகநபராகப் பெயரிட போதுமான ஆதாரங்கள் இருப்பதாக சட்டமா அதிபரால் கடந்த 23ஆம் திகதி குற்றப் புலனாய்வுத் திணைக்களத்திற்கு அறிவித்ததைத் தொடர்ந்து இந்தக் கைது இடம்பெற்றிருந்தது. அதற்கமைய, அவரை இன்று 27ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு புதுக்கடை நீதிவான் பவித்ரா சஞ்சீவனி உத்தரவிட்டமை குறிப்பிடத் தக்கது.

## அநுரவின்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ரணில் விக்கிரமசிங்கதான் மத்திய வங்கி பிணைமுறி மோசடிகளுக்கு காரணம் என்றால் அவருக்கு எதிராக நடவடிக்கைகளை எடுங்கள். அதற்கு நாங்கள் தயாராகவே உள்ளோம். வெறுமனே மக்களை திசை திருப்புவதற்காக வாரமொன்றுக்கு ஒவ்வொரு கதைகளைக் கூறிக்கொண்டிருக்காதீர்கள்.

ஆளும்தரப்பின் இயலாமையை மறைப்பதற்காக எம்மீது தொடர்ச்சியாக விமர்சனங்களைவைத்துக்கொண்டிருப்பதால் எந்தப்பயனுமில்லை. நீங்கள்பொதுவெளியில் கூறும்விடயங்களைசெயலில்காண்பிப்பதற்கு முயற்சியுங்கள் என்றார்.

## யாழ்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உள்ள யாழ்ப்பாண பல்கலைக்கழக பழைய மாணவர்கள், தொழில் துறை சார்ந்தவர்கள், புலம்பெயர் நாட்டில் வசித்து வருபவர்கள் அனைவரையும் வருகை தருமாறு ஏற்பாட்டுக்குழு அறிவித்துள்ளது.

ஏப்ரல் மாதம் 26 ஆம் திகதி முதல் நாள் நிகழ்வு காலை 09 மணிக்கு ஆரம்பமாகவுள்ளது. இதன்போது பொன் விழா தொடர்பான நூல் ஒன்று வெளியீடு செய்யப்படவுள்ளது. அதனைத் தொடர்ந்து கலைப்பீடத்தைச்சேர்ந்தமூத்த இளைப்பாறிய விரிவுரையாளர்கள்கௌரவிக்கப்படவுள்ளனர்.

இரண்டாம்நாள்நிகழ்வாககலைப்பீடத்தைச் சேர்ந்தபழையமாணவர்களின்விளையாட்டுப் போட்டி நிகழ்வுகள் இடம்பெறவுள்ளன. இதின் மென்பந்து, கரப்பந்து, உள்ளிட்ட விளையாட்டுக்களுக்கும் பாரம்பரிய உள்ளக, வெளியக விளையாட்டுகளும் இடம்பெறவுள்ளன.

இறுதி நாள் நிகழ்வாக பல்கலைக்கழக கலைப்பீடத்தைச் சேர்ந்த மாணவர்கள், பழைய மாணவர்கள் அனைவரும் ஒன்றிணைந்து குருதிக் கொடை வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

அதனைத் தொடர்ந்து அனைவருக்குமான இராப்போசன நிகழ்வும் ஒழுங்குபடுத்தப்பட்டுள்ளதாக ஏற்பாட்டுக்குழு அறிவித்துள்ளது.

இந்த நிகழ்விற்காக ஏற்பாட்டுக் குழுவில் அங்கம்வகிக்கும்யாழ்ப்பாணபல்கலைக்கழக கலைப் பீடத்தின் பிடாதிபதி பேராசிரியர் கலாநிதி சிவசுப்பிரமணியம் ரகுராம், பல்கலைக்கழகத்தின் மூத்த பழைய மாணவரும் பேராசிரியருமான கலாநிதி செல்லத்துரை சேதுராஜா, முன்னாள் பாடசாலை அதிபர் அருணாச்சலம் அகிலதாஸ், யாழ்ப்பாணபல்கலைக்கழகபழையமாணவர் ஒன்றியத்தில் பொறுப்பாளர்களில் ஒருவரான மிதிலைச் செல்வி ஶ்ரீபத்மன் ஆகியோர் பொன்விழா நிகழ்விற்கு அனைவரும் வருகை தருமாறு அழைப்பு விடுத்துள்ளனர்.




# நாவற்குழி உணவுக் களஞ்சிய வளாகத்தில் விவசாயிகள் நெல் உலரவிட அனுமதிக்குக

## இயற்கையின் நண்பர்கள் இயக்கம் கோரிக்கை

(சுபேசன்)

நாவற்குழி உணவுக்களஞ்சிய வளாகத்தில் விவசாயிகளை நெல் உலரவைக்க அனுமதிக்கவேண்டும் என இயற்கையின் நண்பர்கள் இயக்கம் வடக்கு மாகாண ஆளுநர் வேதநாயகனிடம் கோரிக்கை முன்வைத்துள்ளனர்.

இது தொடர்பாக இயற்கையின் நண்பர்கள் அமைப்பினர் கருத்துத் தெரிவிக்கையில்;

நெல்லுக்கான உத்தரவாத விலை மற்றும் அரிசிக்கான கட்டுப்பாட்டு விலை அறிவிக்கப்பட்டு வர்த்தமானியில் வெளியிடப்படவில்லை.

குறிப்பாக நெல் கிலோ ஒன்றின் உறுதியான விலையையும், அரிசி கிலோ ஒன்றின் உறுதியான விலையையும் உடனடியாக அறிவித்து அதனை வர்த்தமானியில் வெளியிட வேண்டும்.

இதுவரை காலமும் இலங்கையில் ஆண்டுதோறும் 40 லட்சம் மெற்றிக்தொன் நெல் உற்பத்தி செய்யப்படுகின்ற நிலையில், அவற்றில் 10 ஆயிரம் மெற்றிக்தொன் அளவிலான நெல்லே அரசாங்கத்தால் கொள்வனவு செய்யப்பட்டுள்ளது என்றும் கடந்த ஆண்டுகளில் அரசாங்கம் விவசாயிகளிடமிருந்து சுமார் 5000 மெற்றிக்தொன் நெல்லினையே கொள்வனவு செய்துள்ளதாக புள்ளிவிவரங்கள் கூறுகின்றன.

அரச உணவுக்களஞ்சியங்கள் ஃ நெற்களஞ்சியங்கள் புனரமைப்பதற்கு உரிய நடவடிக்கைகளை விரைவாக எடுக்கவேண்டும். அதற்கு முன்னர் இம்முறை உலர் நெல் மற்றும் ஈர நெல்லினை உரிய தரத்திற்கு ஏற்ப கொள்வனவு செய்து அதற்கான களஞ்சிய வசதியை பயன்படுத்துவதற்கு அரிசி சந்தைப்படுத்தல் சபையானது சுமார் 2 லட்சம் மெட்றிக்தொன் அரிசியை சேமித்து வைக்கக்கூடிய சேமிப்புத்திறனைக் கொண்டுள்ளது.

உணவுத் திணைக்களம், ச.தொ.ச ஆகிய நிறுவனங்களின் நெற்களஞ்சியங்களையும் பயன்படுத்துவதன் மூலம் ஏறத்தாள 3 லட்சம் மெட்றிக்தொன் வரையான நெல்லினை கொள்வனவுசெய்து சேமிக்கமுடியும்.

நெல் அறுவடை காலங்களில் உலரவிடும் தளங்கள் இல்லாமையால் விவசாயிகள் வீதிகளில் நெல்லினை உலரவிடுவதால் நெருக்கடி மற்றும் விபத்துகள் ஏற்படுகின்றன. இதனை கருத்தில் எடுத்து அதற்கான ஏற்பாடுகளும் செய்யப்படவேண்டும்.

தென்மராட்சியில் நெல் அறுவடைசெய்த விவசாயிகள் அண்மைய நாள்களாக நாவற்குழி மற்றும் கைதடி பாலங்களில் நெல்லினை உலரவைக்கும் செயற்பாட்டில் ஈடுபட்டுள்ளனர். அது பாதுகாப்பற்ற ஒரு முறையாக உள்ளதால், நீண்ட காலமாக மூடப்பட்டு இருக்கும் நாவற்குழி உணவுக்களஞ்சிய வெளி வளாகத்தில் நெல் அறுவடை செய்யும் விவசாயிகள் தாங்கள் அறுவடைசெய்த நெல்லினை உலரவைக்க அனுமதிக்க வடக்கு ஆளுநர் அவர்கள் நடவடிக்கை எடுக்கவேண்டும்.

அத்துடன் நீண்ட காலமாக இயங்காமல் இருக்கும் ஏனைய உணவுக் களஞ்சியங்களுடன் நாவற்குழி உணவுக்களஞ்சியமும் மீளவும் புனரமைக்கப்பட்டு நெல் உள்ளிட்ட உணவுப்பொருள்கள் சேமிப்பதற்காக இயங்கவைக்க நடவடிக்கை எடுக்கவேண்டும்.

ஏனெனில் வயலில் அறுவடை செய்யும்போதே கொள்வனவு செய்வதால் நெல்லில் இருக்கும் ஈரலிப்பைக் காரணம் காட்டி நெல்லுக்கு உரிய விலையைக் கொடுப்பதற்கும் கொள்வனவாளர்கள் முன்வருவதில்லை. - என மேலும் அவர்கள் சுட்டிக்காட்டியிருந்தனர்.





# மூளாய் கூட்டுறவு வைத்தியசாலையின் ஊழியர்களுக்கு தலைமைத்துவ பயிற்சி





மூளாய்கூட்டுறவுவைத்தியசாலை ஊழியர்களுக்கான தலைமைத்துவ பயிற்சி பட்டறையானது விசன்ஸ் குளோபல் எம்பவர்மென்ற் நிறுவனத்தினால் ஐந்து நாள்கள் சிறப்பாக நடைபெற்றது.

மூளாய்கூட்டுறவுவைத்தியசாலை மற்றும் அதன் யாழ்ப்பான கிளையில் சேவையாற்றும் மருத்துவத்துறை, நிர்வாகத்துறை மற்றும் கணக்குத்துறையைச் சார்ந்த 30 ஊழியர்கள் தலைமைத்துவம் சார்ந்த பங்கேற்றல்முறை செயற்பாடுகள் வழியில் பயிற்றுவிக்கப்பட்டனர்.

சுயவிழிப்புணர்வு, தன்னம்பிக்கையைகட்டியெழுப்புதல், தலைமைத்துவம், ஒத்துணர்வு, குழுச்செயற்பாடு, தொடர்பாடல், திட்டமிடல், நேர முகாமைத்துவம், பிரச்சினைகளைத் தீர்த்தல், தீர்மானம் எடுத்தல், மன அழுத்தத்தைக் கையாளுதல், உணர்வுகளைக் கையாளுதல், படைப்பாற்றல் திறன், முரண்பாடு

முகாமைத்துவம் மற்றும் இலக்கு நிர்ணயித்தல் போன்ற திறன்சார் அமர்வுகள் பயிற்சி பட்டறையில் செயற்பாட்டு முறையில் மேற்கொள்ளப்பட்டன.

மகிழ்ச்சியூட்டும் மற்றும் ஆர்வமூட்டும் செயற்பாடுகள் வாயிலான இந்த பயிற்சியில் பயிலுனர்கள் அனைவரும் தங்களது தலைமைத்துவம் சார்ந்த துலங்கல்களை சிறப்பாக வெளிப்படுத்தி இருந்தனர்.

ஊழியர்களின்தலைமைத்துவபண்புகளை வளர்ப்பதற்காகவும் நிறுவனத்தின் அபிவிருத்தி நோக்கியும்மற்றும் ஊழியர்கள் அனைவரும் ஒருமித்த கருத்துடனும் குழுப்பிணைப்புடனும்பயணிப்பதற்காகவும், பயிலுனர்கள் வைத்தியசாலையின் நலனுக்கானசெயற்திட்டங்களைஉருவாக்கி, வைத்தியசாலையின் நிதி

அனுசரணையில் எதிர்வரும் ஒரு மாத காலப் பகுதியில் அமுலாக்கம் செய்ய உள்ளனர்.

மூளாய் கூட்டுறவு வைத்தியசாலையின் பணிப்பாளர் சபையின் ஆலோசனை மற்றும் ஒத்துழைப்புடன்நடத்தப்பட்ட இந்தபயிற்சி பட்டறையில், விசன்ஸ்நிறுவனத்தின்தலைவர் தெய்வேந்திரராஜா, பிரதம நிறைவேற்றுப் பணிப்பாளர் மயூரன் ஆகியோர் பிரதம வளவாளர்களாகவும் விசன்ஸ் நிறுவனத்தின் மூன்று பயிற்சி ஒருங்கிணைப்பாளர்கள் ஏனைய வளவாளர்களாகவும் செயற்பட்டு பயிற்சியை முன்னெடுத்திருந்தனர்.




# பொதுச் சுகாதார மருத்துவ மாதுக்களின் வாழ்வாதார மேம்படுத்தல் செயலமர்வு

(நூருல் ஹுதா உமர்)

சாய்ந்தமருது சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்தில் கடமையாற்றும் பொது சுகாதார மருத்துவ மாதுக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதற்கான செயலமர்வு அலுவலக கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது

நேச்சர் ஃபார்மிங் பிளாண்டேஷன் பிரைவேட் லிமிடெட் நிறுவனத்தின் அனுசரணையுடன் சாய்ந்தமருது சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்தில் நடைபெற்ற இந்நிகழ்வில் அந்நிறுவனத்தின் பிரதிநிதிகளான பிராந்திய முகாமையாளர் அரசரெட்ணம் , பிரதேச முகாமையாளர் முகுந்தன் ஆகியோர்கள் கலந்து கொண்டனர். சாய்ந்தமருது சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் ஜே மதன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் குடும்ப நல உத்தியோகத்தர்கள் அனைவரும் கலந்து கொண்டு பயன் பெற்றமை குறிப்பிடத்தக்கது.

# விசேட தேவையுடையவர்களுக்கு திருகோணமலையில் பல உதவிகள்



(ஹஸ்பர்)

திருகோணமலை மாவட்ட விசேட தேவை உடையோர்கள் அமைப்பின் மூலமாக சக்கர நாற்காலி, ஊன்றுகோல் மற்றும் பாடசாலை மாணவர்களுக்கான அப்பியாசக் கொப்பிகள் வழங்கும் நிகழ்வு சனிக்கிழமை திருகோணமலை நகர சபையின் மண்டபத்தில் நடைபெற்றது.

இந்த நிகழ்வை முன்னிட்டு இலவச கண் சிகச்சை மற்றும் கண்ணாடி வழங்கும் நிகழ்வு நடைபெற்றது.

குறித்த நிகழ்வின் தலைமை விருந்தினரான இலங்கை தமிழரசு கட்சியின் திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் கதிரவேலு சண்முகம் குகதாசன் அவர்களால் மாணவர்களுக்கு கொப்பிகள் மற்றும் விசேட தேவை உடையவர்களுக்கு சக்கர நாற்காலி, பொருளாதாரத்தில் பின்தாங்கிய மக்களுக்கு உலர் உணவுப் பொதிகள் முதலியன வழங்கி வைக்கப்பட்டன.

இந்நிகழ்வின் தலைமை விருந்தினர் உரையின் போது நாடாளுமன்ற உறுப்பினர் குகதாசன் தெரிவித்தவை வருமாறு -

ஒவ்வொரு வருடமும் இந்த நிகழ்வில் கலந்து கொண்டு பொருள்கள் வழங்குவதைப் போன்று எப்போதும் விசேட தேவை உடையவர்களுக்கு உறுதுணையாக நிற்பேன் என்று கூறினார்.

இந்நிகழ்வை விஷேட தேவையுடையோர் அமைப்பின் தலைவர் திருமதி செல்வராணி சித்தார்த்தன்மற்றும்செயலாளர்செல்வேந்திரன் உள்ளிட்டவர்களால் சிறப்பான முறையில் ஒருங்கிணைப்பு செய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.







காலைக்கதிர்
Kalaikkathir

# பாதசாரிக் கடவையில் பெண்ணை மோதித் தள்ளிய இரு பொலிஸார்

## போதையில் இருந்தனர் என்று குற்றச்சாட்டு



பாதசாரிக் கடவையில் வீதியைக் கடந்தவரை மோட்டார்சைக்கிளில்வந்த பொலிஸார் மோதியதில் வயோதிபப் பெண் காயமடைந்தார்.

கிளிநொச்சி ஏ9 பிரதான வீதியில் அம்மாச்சி உணவகத்திற்கு முன்பாக உள்ள பாதசாரி கடவையில் இந்தச் சம்பவம் நேற்று இடம்பெற்றது.

விபத்தைஏற்படுத்திய பொலிஸார்மதுபோதையில் இருந்தனர் என்று தாம் சந்தேகிக்கின்றனர் என்றும் அவர்களின் உந்துருளியில் மதுபானப் போத்தல்கள் காணப்பட்டன என்றும் விபத்தை நேரில் கண்டவர்கள் தெரிவித்தனர்.

இந்த விபத்தில் காயமடைந்த பெண் கிளிநொச்சி வைத்தியசாலையில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டுள்ளார்.

# கல்முனையில் குருதிக்கொடை

(சகா தேவராஜா)

கல்முனைகார்மேல்பற்றிமாதேசியபாடசாலையின் 125ஆவதுஆண்டுநிறைவைமுன்னிட்டு சனிக்கிழமை மாபெரும் இரத்ததான முகாம்( குருதிக்கொடை ) நடைபெற்றது.

கல்முனை ஆதார வைத்தியசாலையுடன் இணைந்து காலை 8.00 மணி முதல் மாலை 4.30 மணிவரை பாடசாலை வளாகத்தில் இடம் பெற்றது.

ஆரம்பவைபவம்கல்லூரி அதிபர் அருட்சகோதரர் றெஜினோல்ட் தலைமையில் நடைபெற்றது.

பிரதம அதிதியாக கல்முனை ஆதார வைத்தியசாலையின் பணிப்பாளர் வைத்தியர் குணசிங்கம் சுகுணன் கலந்து சிறப்பித்தார்.

கௌரவ அதிதியாக கல்முனை வடக்கு சுகாதார வைத்திய அதிகாரி மருத்துவர் நடராஜா றமேஸ் மற்றும் விசேட அதிதியாக வைத்தியசாலையின் இரத்த வங்கி பொறுப்பாளர் மருத்துவர் திருமதி பி.எம்.கவிதா கலந்து சிறப்பித்தார்கள்.

கார்மேல் பற்றிமாவின் 125 ஆவது நிறைவு நிகழ்வு நிறைவேற்றுக்குழுவினரும் கலந்து ஒத்துழைத்தனர்.

125 ஆவது ஆண்டு நிறைவைக் கொண்டாடும் பல நிகழ்வுகள் ஒரு வருடத்திற்கு மாதாந்தம் இடம் பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கதாகும்.












இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House (Pvt) Ltd.நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 27.01.2025இல் வெளியிடப்பெற்றது